
491



OFFICE OF THE REGISTRAR OF ...
22 NOV 1957
MADRAS

# திரு. வி. க.

# தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பு

ஆசிரியர் :
பி. வீரராகவன்,
(ஆசிரியர் : 'ஆரம்பக்கல்வி.')



...யேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை — 1.

T3
031,6 (20
N57

# திரு. வி. க.

# தமிழ் வாசகம்

## (இரண்டாம் புத்தகம்)

OFFICE OF THE REGISTRAR OF ...
22 NOV 1957
MADRAS

ஆசிரியர் :

**பி. வீரராகவன்**

(ஆசிரியர், "ஆரம்பக் கல்வி," சென்னை.)

*(Paper used: 34 lbs. Double Demmy White Printing.)*

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை—1.

பதிப்புரிமை] 1957 [விலை அணு 6. (37 ந. பை.)

முதற் பதிப்பு — 1957

# முன்னுரை

---

'திரு. வி. க. தமிழ் வாசக' வரிசையில் இது இரண்டாம் புத்தகம். இது 1941-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாட அமைப்பின்படி எழுதப்பட்டது.

இதில் இவ்வகுப்புக்கு வேண்டிய எண்ணிக்கைப் புதுச் சொற்கள் இருக்கின்றன; பிள்ளைகளுக்கு ஏற்ற பாடங்கள் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

பாட அமைப்பில் சொல்லியபடி பயிற்சிகளும் எளிய இலக்கணக்குறிப்புகளும் தரப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள், இதில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை மாதிரிகளாகக் கொண்டு வேண்டும் அளவு வேறு பயிற்சிகளையும் பிள்ளைகளுக்குச் சொல்லித் தரவேண்டும்.

பிள்ளைகளுக்குப் பாடங்களில் விருப்பம் ஏற்படுமாறு படங்கள் பல, ஆங்காங்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எளிய பாட்டுக்களும் இவ்வாசகத்தில் இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்கள் இவ்வாசகத்தை முறைப்படி பிள்ளைகளுக்குக் கற்பித்து அவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் உண்டாகும்படி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

+3
031,1(2)
N57

சென்னை,
21-10-'57

ஆக்கியோன்.

139599
சென்னை-600 008.

---

வெங்கடேசன் அச்சகம், சென்னை-1.

## (இரண்டாம் புத்தகம்)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | படப் பயிற்சி | ... | 1 |
| 2. | படப் பயிற்சி | ... | 2 |
| 3. | படப் பயிற்சி | ... | 3 |
| 4. | பூ (பாட்டு) | ... | 4 |
| 5. | படம் சேர்த்துப் படி | ... | 5 |
| 6. | கப்பல் (பாட்டு) | ... | 6 |
| 7. | எது எங்கே இருக்கும்? | ... | 7 |
| 8. | தாயும் குழந்தையும் | ... | 8 |
| 9. | வினவும் விடையும் | ... | 9 |
| 10. | நாய்க் குட்டி (பாட்டு) | ... | 10 |
| 11. | எங்கள் குடும்பம் | ... | 11 |
| 12. | எங்கள் வீடு | ... | 12 |
| 13. | எங்கள் ஊர் | ... | 13 |
| 14. | எங்கள் பாடசாலை | ... | 14 |
| 15. | பாடசாலைத் தோட்டம் | ... | 15 |
| 16. | காலை வேலை | ... | 16 |
| 17. | எங்கள் வகுப்பு | ... | 17 |
| 18. | மாலை வேலை | ... | 18 |
| 19. | சூரியன் | ... | 20 |
| 20. | சூரியன் (பாட்டு) | ... | 22 |
| 21. | சந்திரன் | ... | 23 |
| 22. | வெண்ணிலா (பாட்டு) | ... | 25 |
| 23. | திசைகள் | ... | 26 |
| 24. | என்ன, எங்கே, எப்படி? | ... | 29 |
| 25. | குல்லா வியாபாரியும், குரங்குகளும் | ... | 30 |
| 26. | வீட்டு விலங்குகள் | ... | 32 |
| 27. | பசு (பாட்டு) | ... | 35 |
| 28. | பறவைகள் | ... | 36 |

29. கிளி (பாட்டு) ... 39
30. பழங்கள் ... 40
31. சுவைகள் ... 43
32. திருட்டு மாடு ... 46
33. தம்பீ ! (பாட்டு) ... 48
34. இது என்ன ? ... 49
35. புத்தியுள்ள காக்கை ... 50
36. காக்கை (பாட்டு) ... 52
37. 'பேராசை பெருநட்டம்' ... 53
உலகநீதி ... 57



(Paper used: 34 lbs. Double Demmy White Printing)

Price: 37 N. P.

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

# தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்ட்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.


அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!


# 1. படப் பயிற்சி

1. படத்தைப் பார். அதில் உள்ள பொருள்களின் பெயர்களைச் சொல்.




**ஆசிரியர்க்குக் குறிப்பு** :--(1) படத்தில் உள்ள பொருள்களைப் பற்றி உரையாடல் நடத்தல். (2) ஒவ்வொரு பொருளைப் பற்றியும் ஒரு வாக்கியம் எழுதச் செய்தல்.


## 2. படப் பயிற்சி



குறிப்பு : (1) படத்தில் உள்ள பொருள்கள் பற்றி உரையாடல்.

(2) ஒவ்வொரு பொருளும் எதற்கு உதவும் என்பது பற்றி ஒரு வாக்கியம் எழுதுதல்.

# 3. படப் பயிற்சி



குறிப்பு: படத்தைப் பார்த்துக் கீழ்வரும் வினக்களுக்கு விடை எழுதுதல்.

1. சுவரில் மாட்டி இருப்பது என்ன ?
2. உறியில் எத்தனை பானைகள் இருக்கின்றன ?
3. அடுப்பின்மேல் என்ன இருக்கிறது ?
4. அம்மியின்மேல் இருப்பது என்ன ?
5. முறத்துக்கும் கூடைக்கும் நடுவில் இருப்பது என்ன ?
6. கூசா எங்கே இருக்கிறது ?




# 4. பூ


(பாட்டு)


பூவே உன்னைப் படைத்தவர் யார் ?
புதுமணம் உள்ளே நுழைத்தவர் யார் ?
பலபல நிறங்கள் பண்ணவர் யார் ?
பார்க்க அழகு தந்தவர் யார் ?
உன்னைச் செய்தோன் வல்லவனே !
உலகுக் கெல்லாம் நல்லவனே !

—மணி திருநாவுக்கரசர்


## 5. படம் சேர்த்துப் படி.


இந்த  படிக்க உதவும்.

இந்த  வீட்டைக் காக்கும்.


இது தம்பி வாங்கிய 

இரவில்  எலி பிடிக்கும்.

இந்த  எழுத உதவும்.

இது பள்ளிக்கூடத்து 

இந்த  பால் கொடுக்கும்.



# 6. கப்பல்

(பாட்டு)

கப்பல் நல்ல கப்பலாம்.
கடலில் செல்லும் கப்பலாம்.

அக்க ரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏறும் கப்பலாம்.

சாமான் ஏற்றும் கப்பலாம்.
சண்டை செய்யும் கப்பலாம்.

கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்.

தூர தேசம் செல்லுமாம்.
துறை முகத்தில் தங்குமாம்.


கலங் கரை விளக்கிஞல்
கரையைக் கண்டு சேருமாம்.

— அழ. வள்ளியப்பா.


## 7. எது எங்கே இருக்கும் ?

1. மீன் குளத்தில் இருக்கும்.
2. வண்டு பூவில் இருக்கும்.
3. பாம்பு புற்றில் இருக்கும்.
4. எலி வளையில் இருக்கும்.
5. கிளி கூட்டில் இருக்கும்.
6. ஆந்தை பொந்தில் இருக்கும்.
7. பசு தொழுவத்தில் இருக்கும்.
8. குதிரை இலாயத்தில் இருக்கும்.
9. ஆடு பட்டியில் இருக்கும்.
10. குரங்கு மரத்தில் இருக்கும்.
11. மனிதர் வீட்டில் இருப்பர்.
12. நீ எங்கே இருக்கிறாய் ?

# 8. தாயும் குழந்தையும்




ஆடும் குட்டிகளும்



பசுவும் கன்றும்



தாயும் குழந்தையும்



கோழியும் குஞ்சுகளும்

*இவற்றைத் தெரிந்துகொள் :*

| | |
|---|---|
| எருமைக் கன்று | காக்கைக் குஞ்சு |
| குதிரைக் குட்டி | குருவிக் குஞ்சு |
| கழுதைக் குட்டி | புறாக் குஞ்சு |

# 9. வினாவும் விடையும்



இவன் என்ன
செய்கிறான் ?
**இவன் படிக்கிறான்.**




இவள் என்ன
செய்கிறாள் ?
**இவள் பாடுகிறாள்.**



இவர்கள் என்ன
செய்கிறார்கள் ?
**இவர்கள் ஓடுகிறார்கள்.**



இது என்ன செய்கிறது ?
**இது படுத்திருக்கிறது.**



இவை என்ன
செய்கின்றன ?
**இவை நிற்கின்றன.**



# 10. நாய்க் குட்டி


(பாட்டு)

நல்ல நல்ல நாய்க் குட்டி.
நான் வளர்க்கும் நாய்க் குட்டி.
வெள்ளை நிற நாய்க் குட்டி.
வீரமான நாய்க்குட்டி.

பாலும் சோறும் உண்ணுமே ;
பண்டம் பிஸ்கட் தின்னுமே ;
வாலை வாலை யாட்டுமே ;
வாசல் காவல் காக்குமே.

நன்றி யுள்ள நாய்க் குட்டி
நான் வளர்க்கும் நாய்க் குட்டி
என்றும் என்னோடு கூடி
விளையாடும் நாய்க் குட்டி.


—அங்கமங்கலம் குப்பு



## 11. எங்கள் குடும்பம்

| | | |
|---|---|---|
| தந்தையார் | பெற்ரோர் | தங்கை |
| தாயார் | அண்ணன் | தம்பி |
| குடும்பம் | அக்காள் | உடன் பிறந்தவர் |


1. பத்திரிகை படிப்பவர் என் தந்தையார்.
2. துணி தைப்பவர் என் தாயார்.
3. இவர் இருவரும் என் பெற்ரோர்.
4. ஆர்மோனியம் வாசிப்பவள் என் அக்காள்.
5. அவர் பின் நிற்பவர் என் அண்ணன்.
6. அக்காள் முன் இருப்பவள் என் தங்கை.
7. தங்கையின் பின் நிற்பவன் என் தம்பி.
8. இவர் நால்வரும் என் உடன் பிறந்தவர்.
9. நாங்கள் எல்லாரும் ஒரு குடும்பம்.




## 12. எங்கள் வீடு

| | | |
|---|---|---|
| திண்ணை | படிக்கும் | சிறியது |
| தோட்டம் | குளிக்கும் | பெரியது |
| கூடம் | அறைகள் | நடுவில் |


1. இது எங்கள் வீடு.
2. இது சிறிய வீடு.
3. இதில் இரண்டு அறைகள் இருக்கின்றன.
4. நான் படிக்கும் அறை பெரியது.
5. நான் குளிக்கும் அறை சிறியது.
6. அறைகளுக்கு நடுவில் கூடம் உண்டு.
7. வீட்டின் முன் புறம் இருப்பது திண்ணை.
8. வீட்டின் பின் புறம் இருப்பது தோட்டம்.
9. தோட்டத்தில் நான் விளையாடுவேன்.



## 13. எங்கள் ஊர்

| | | |
|---|---|---|
| தெரு | கழனி | வரிசை |
| கிணறு | பயிர் | வீடுகள் |
| தண்ணீர் | ஆறு | பாடசாலை |

1. இது நான் பிறந்த ஊர்.
2. இதில் சில தெருக்கள் இருக்கின்றன.
3. தெருக்களில் வரிசையாய் வீடுகள் உள்ளன.
4. இங்கு ஒரு கோயிலும் இருக்கிறது.
5. கிணறு ஒன்று தெருவில் இருக்கிறது.
6. கிணற்றுத் தண்ணீர் நன்ருய் இருக்கும்.
7. ஊருக்கு அருகில் ஆறு உண்டு.
8. ஆற்று நீர் கழனிக்குப் பாயும்.
9. கழனியில் பயிர் நன்ருய் விளையும்.
10. ஊரில் ஒரு பாடசாலை உண்டு.
11. அதில் நான் படிக்கிறேன்.




# 14. எங்கள் பாடசாலை


| | | |
|---|---|---|
| ஐந்து | பிள்ளைகள் | நன்றாய் |
| பத்து | சிறுவர் | உபாத்தியாயர் |
| முப்பது | சிறுமியர் | நல்லவர் |

1. இது நான் படிக்கும் பாடசாலை.
2. இதில் ஐந்து வகுப்புக்கள் இருக்கின்றன.
3. நான் படிப்பது இரண்டாம் வகுப்பு.
4. அதில் முப்பது பிள்ளைகள் படிக்கின்றார்கள்.
5. அவர்களில் பத்துப்பேர் சிறுமியர்.
6. மற்றவர் எல்லோரும் சிறுவர்.
7. எங்கள் உபாத்தியாயர் மிகவும் நல்லவர்.
8. அவர் எங்களை அடிக்க மாட்டார்;
9. எங்களிடம் அன்பாய் இருப்பார்.
10. நாங்கள் நன்றாய்ப் பாடம் படிப்போம்.



## 15. பாடசாலைத் தோட்டம்

1. இது எங்கள் பாடசாலைத் தோட்டம்.
2. இதன் உள்ளே வந்து பார்.
3. அதோ இருப்பவை பூச்செடிகள்.
4. மல்லிகையும் ரோசாவும் பூத்து இருப்பதைப் பார்.
5. பூச்செடிகளுக்கு அப்பால் இருப்பவை காய் கறிச் செடிகள்.
6. கத்தரியும் வெண்டையும் காய்த்திருப்பதைப் பார்.
7. இங்கே உள்ளவை பழ மரங்கள்.
8. வாழை, குலை விட்டிருக்கிறது.
9. கொய்யா மரமும் கிச்சிலி மரமும் காய்த்து இருப்பதைப் பார்.




# 16. காலை வேலை

| | | |
|---|---|---|
| அதிகாலை | சுத்தம் | சாப்பிடு |
| எழுந்திரு | கசக்கி | கணக்கு |
| கடவுள் | விளக்கி | ஒழுங்கு |


1. நான் அதிகாலையில் எழுந்திருப்பேன்.
2. எழுந்ததும் கடவுளைத் தொழுவேன்.
3. பல் விளக்கி, கைகால் சுத்தம் செய்வேன்.
4. உட்கார்ந்து பாடங்களைப் படிப்பேன்.
5. பாடம் எழுதியபின் கணக்குப் போடுவேன்.
6. குளிர்ந்த நீரில் குளிப்பேன்.
7. துணிகளைக் கசக்கிக் கட்டுவேன்.
8. வீட்டில் உள்ளதைச் சாப்பிடுவேன்.
9. ஒழுங்காய்ப் பள்ளிக்குப் போவேன்.




# 17. எங்கள் வகுப்பு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | குறும்பு | உட்காரு |
| வணக்கம் | அசுத்தம் | அடுக்கு |
| கவனமாய் | அடங்கி | வீணாய் |

1. நான் வகுப்பில் நிமிர்ந்து உட்காருவேன்.
2. உபாத்தியாயருக்கு வணக்கம் செய்வேன்.
3. பாடங்களைக் கவனமாய்க் கேட்பேன்.
4. வகுப்பில் வீணாய்ப் பேச மாட்டேன்.
5. குறும்பு ஒன்றும் செய்ய மாட்டேன்.
6. புத்தகங்களை நன்றாய் அடுக்கி வைப்பேன்.
7. வகுப்பை அசுத்தம் செய்ய மாட்டேன்.
8. ஆசிரியருக்கு எப்போதும் அடங்கி நடப்பேன்.
9. பாடங்களை நன்றாய்ப் படிப்பேன்.



## 18. மாலை வேலை

| | | |
|---|---|---|
| உடுப்பு | சற்று | விளையாடு |
| கழற்றி | பழைய | சண்டை |
| குச்சி | பாடம் | முதலில் |

1. மாலையில் பாடசாலை முடியும்.
2. முடிந்தவுடனே வீட்டிற்கு வருவேன்.
3. உடுப்பைக் கழற்றிக் குச்சியில் மாட்டுவேன்.
4. வெளியே போய்ச் சற்று விளையாடுவேன்.
5. பிள்ளைகளோடு சண்டை செய்யமாட்டேன்.
6. விளக்கு வைக்குமுன் வீட்டுக்கு வருவேன்.
7. விளக்கின் முன்னே பாடம் படிப்பேன்.
8. பழைய பாடங்களை முதலில் படிப்பேன்.
9. புதிய பாடங்களைப் பிறகு படிப்பேன்.

## பயிற்சி :

**(1) விடை சொல்லு :**

1. உன் பெயர் என்ன ?
2. நீ பிறந்த ஊர் எது ?
3. உன் வீட்டின் முன்புறம் என்ன இருக்கிறது ?
4. தோட்டத்தில் நீ என்ன செய்வாய் ?
5. நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் ?
6. நீ காலையில் எழுந்ததும் என்ன செய்வாய் ?
7. வகுப்பில் உபாத்தியாயருக்கு என்ன செய்வாய் ?


**(2) எதிர்ப் பதங்கள் :**

பெரிய ✕ சிறிய, முன்னே ✕ பின்னே, உள்ளே ✕ வெளியே.
காலை ✕ மாலை, சுத்தம் ✕ அசுத்தம்.

**(3) கோடிட்ட இடங்களில் கீழே கொடுத்துள்ள சொற்களை அமைத்துப் படி :**

பெரியது, வரிசையாய், வணக்கம், பின்புறம், அசுத்தம், சண்டை.

1. என் வீடு ———.
2. வீட்டின் ——— தோட்டம் உண்டு.
3. வகுப்பை ——— செய்யாதே.
4. பெரியவர்களுக்கு ——— செய்.
5. பிள்ளைகளுடன் ——— செய்யாதே.
6. தெருக்களில் ——— வீடுகள் உண்டு.



## 19. சூரியன்

| | | | |
|---|---|---|---|
| வானம் | மாலை | இருள் | வாரம் |
| உச்சி | பொழுது | இரவு | ஞாயிறு |
| வெளிச்சம் | வெப்பம் | நாட்கள் | கிழமை |
| உதிக்கிறது | கொண்டது | மாதம் | பெயர் |

1. காலையில் சூரியன் வானத்தில் உதிக்கிறது. சூரியன் உதிக்கும் வேளைக்குக் **காலை** என்பது பெயர். மாலையில் சூரியன் மறைகிறது. சூரியன் மறையும் பொழுதுக்கு **மாலை** என்பது பெயர்.

2. நடுப்பகலில் சூரியன் உச்சியில் வரும். அப்பொழுது வெப்பம் அதிகமாய் இருக்கும். சூரியன் நமக்கு வெப்பமும் வெளிச்சமும் தருகிறது.

3. சூரியன் மறைந்ததும் இருள் வரும். இருளான காலத்தை **இரவு** என்கிறோம். வெளிச்சமான காலத்தைப் **பகல்** என்கிறோம். ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள். நாளை நாம் கிழமை என்கிறோம். ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். சூரியனுக்கு ஞாயிறு என்று ஒரு பெயர் உண்டு. ஞாயிற்றுக் கிழமை வாரத்தின் முதல் நாள்.

**கிழமைகள் ஏழு :**

1. ஞாயிறு
2. திங்கள்
3. செவ்வாய்
4. புதன்
5. வியாழன்
6. வெள்ளி
7. சனி

4. முப்பது நாட்கள் கொண்டது ஒரு திங்கள் அல்லது மாதம். பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஓர் ஆண்டு.

**தமிழ் மாதங்கள் பன்னிரண்டு :**

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி

**வினாக்கள் :**

1. கிழமைகள் எத்தனை ? அவை எவை ?
2. மாதங்கள் எத்தனை ? அவை எவை ?

## 20. சூரியன்

(பாட்டு)

| | | |
|---|---|---|
| செந்நிறம் | கடும்பகல் | தொலைவு |
| வெண்ணிறம் | நிலவுலகம் | பேரிருள் |
| பொன்னிறம் | கனி | எழும் |

சூரியனே ! சூரியனே !
தொலைவில்எழும் சூரியனே !
பேரிருளை நீக்கவரும்
பெரியவனும் சூரியனே ! 1

காலையினில் செந்நிறமாய்க்
கடும்பகலில் வெண்ணிறமாய்
மாலையினில் பொன்னிறமாய்
மாறிவரும் சூரியனே ! 2

நீயில்லா விடில்இந்த
நிலவுலகம் பாழாமே !
காயெங்கே ? பூவெங்கே ?
கனிஎங்கே ? சூரியனே ! 3



## 21. சந்திரன்

| | | |
|---|---|---|
| குளிர்ச்சி | நிலா மறைவு நாள் | நிலா |
| குறைந்து | முழுநிலா நாள் | ஒளி |
| வளர்ந்து | இருட்டு | முழு |
| | நிலவு | |

1. சந்திரன் இரவில் ஒளி வீசும். சந்திரனை நிலா என்கிறோம். நிலாவின் ஒளியை நிலவு என்கிறோம். நிலவு குளிர்ச்சியாய் இருக்கும்.

2. முழு நிலா இருக்கும் நாளை **முழுநிலா நாள்** என்கிறோம். அன்று முதல் சந்திரன் தேய்ந்து கொண்டே போகும். பதினைந்தாம் நாள் சந்திரனே தெரியாது. அன்று இரவு முழுவதும் இருட்டாய்

இருக்கும். அந்த நாளுக்கு **நிலா மறைவு நாள்** என்பது பெயர்.

3. நிலா மறைவு நாள் முதல் சந்திரன் வளர்ந்து கொண்டே வரும். பதினைந்தாம் நாள் முழுச் சந்திரனைக் காணலாம். அன்று இரவு ஒளி மிகுந்து யிருக்கும்.

4. சந்திரன் தேயும் காலத்தைத் **தேய்பிறை** என்கிறோம். சந்திரன் வளரும் காலத்தை **வளர்பிறை** என்கிறோம்.

### எது எதற்குப் பொருந்தும்?

| | |
|---|---|
| சூரியன் | நிலா மறைவு நாள். |
| சந்திரன் | முழு நிலா நாள். |
| இரவு முழுதும் இருள் | சூரியன் உதிக்கும். |
| இரவு முழுதும் ஒளி | சூரியன் மறையும். |
| காலையில் | வெயில். |
| மாலையில் | நிலவு |

# 22. வெண்ணிலா

(பாட்டு)

| | | |
|---|---|---|
| வானம் | களித்திடு | தந்திடு |
| அழைக்க | அழகு | கொடிய |
| குவலயம் | மகிழ் | அகற்றி |

வானத்தின் மீதுலாவும் வெண்ணிலாவே!—நீ
வளர்ந்து குறைவதென்ன? வெண்ணிலாவே!

அழுகின்ற பிள்ளைகளும் வெண்ணிலாவே!
— உன்னை
அழைக்கக் களித்திடுமே வெண்ணிலாவே!


பூமிதன்னைச் சுற்றிவரும் வெண்ணிலாவே!
— உன்னைப்
புலவர் புகழ்வதென்ன? வெண்ணிலாவே!

ஆயிரமாம் நட்சத்திரம் வெண்ணிலாவே!
— உன்றன்
அழகுக்கிங் கீடல்லவே வெண்ணிலாவே!

சூரியன் ஒளியுனக்கு வெண்ணிலாவே;—தினம்
சொந்தமாகத் தந்திடுவான் வெண்ணிலாவே!

கொடிய இருளகற்றி வெண்ணிலாவே!—இந்தக்
குவலயத்தை மகிழ்விப்பாய் வெண்ணிலாவே!

134599
TB
031,6(2)
.N5)




## 23. திசைகள்

| | | |
|---|---|---|
| உதிக்கும் | கிழக்கு | தெற்கு |
| திக்கு | மேற்கு | வலக்கை |
| திசை | வடக்கு | இடக்கை |

1. சூரியன் உதிக்கும் பக்கத்தைப் பார்த்து நில். அப்படி நின்ருல், உனக்கு முன் பக்கம் இருக்கும் திசை **கிழக்கு** ஆகும்; உனக்குப் பின் பக்கம் **மேற்கு** ஆகும்.

2. நின்ற நிலேயில் இருந்து, உன் இரண்டு கைகளேயும் இருபுறமும் தோளுக்கு நேரே நீட்டு. உன் வலக்கைப்புறம் **தெற்கு**; இடக்கைப்புறம் **வடக்கு**.

3. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனத் திசைகள் நான்கு. திசைகளேத் திக்குகள் என்றும் சொல்லலாம்.

4. சூரியன் தினந்தோறும் கிழக்குத் திக்கில் உதிக்கிறது; மேற்குத் திக்கில் மறைகிறது.

## பயிற்சி :

**(1) இவற்றை மனத்துக்குள் படித்து விடை சொல் :**

1. சூரியன் நமக்கு என்ன கொடுக்கிறது ?
2. சூரியன் எப்போது உச்சியில் இருக்கும் ?
3. திசைகள் எத்தனை ?
4. சூரியன் உதிக்கும் திசை எது ?
5. சூரியன் எத்திசையில் மறையும் ?
6. இந்த மாதம் என்ன மாதம் ?
7. இன்று என்ன கிழமை ?
8. நீ எந்தக் கிழமைகளில் பாடசாலைக்கு வருவதில்லை ?


**(2) ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு இரண்டு சொற்கள் கீழே உள்ளன. அவற்றைப் பிரித்து எழுது :**

தாயார், கை, தகப்பனார், கால், கிழக்கு, திங்கள், வீடு, மேற்கு, திண்ணை, செவ்வாய்.

**(3) கீழ் வரும் வரிசைகளில் இனம் அல்லாத சொற்களை அடித்துவிடு :**

1. தலை, கண், திண்ணை.
2. அண்ணன், தம்பி, திங்கள்.
3. வெள்ளி, சனி, மேற்கு.
4. தெற்கு, வடக்கு, ஞாயிறு.
5. கூடம், அறை, தம்பி.

படத்தைப் பார்த்துப் பதில் எழுது :




குறிப்பு : இப்படத்தில் உள்ளவற்றைப் பார்த்து அடுத்த பக்கத்தில் உள்ள வினாக்களுக்கு விடை எழுது.

## 24. என்ன, எங்கே, எப்படி ?

1. குழந்தை **என்ன** செய்கிறது ?
குழந்தை தாயின் ——— மேல் இருக்கிறது.

2. பெண் **என்ன** செய்கிருள் ?
பெண் ——— படிக்கிருள்.

3. சேவல் **எங்கே** இருக்கிறது ?
சேவல்——————.

4. நொண்டி **எப்படி** நடக்கிருன் ?
நொண்டி கோல்———.


5. மரக்கிளையில் உட்கார்ந்திருக்கிறது **எது** ?
மரக்கிளையில்——————.

6. ஆகாயத்தில் பறந்து போகின்றவை **எவை** ?
——————பறவைகள்.

7. கூண்டிற்குள் இருப்பது **யாது** ?
கூண்டிற்குள் ———.

8. தட்டில் இருப்பவை **யாவை** ?
தட்டில் ———.

## 25. குல்லா வியாபாரியும், குரங்குகளும்



**முன் பக்கத்தில் உள்ள படத்தைப் பார்த்துக் கீழ் வரும் கேள்விகளுக்குப் பதில் சொல்:**

(படம் 1.) 1. வியாபாரி தலைமீது என்ன வைத்துக்கொண்டு போகிறான் ?

2. அவன் கையில் என்ன இருக்கிறது ?

(படம் 2.) 1. வியாபாரி என்ன செய்கிறான் ?
மூட்டைகள் எங்கே இருக்கின்றன ?

(படம் 3.) 1. குல்லா மூட்டையை எவை அவிழ்க்கின்றன ?

2. அவை குல்லாக்களை என்ன செய்கின்றன ?

(படம் 4.) 1. வியாபாரி எழுந்து என்ன செய்கிறான்?
2. குல்லாக்கள் எங்கு இருப்பதைப் பார்க்கிறான் ?


(படம் 5.) 1. வியாபாரி தன் தலையிலிருந்த குல்லாவை என்ன செய்தான் ?

2. குரங்குகள் தங்கள் தலையில் இருந்த குல்லாக்களை என்ன செய்கின்றன ?

(படம் 6.) 1. வியாபாரி குல்லாக்களைச் சேர்த்து எடுத்து என்ன செய்கிறான் ?

**பயிற்சி :**

இந்தக் கதையை நீயே எழுது.



# 26. வீட்டு விலங்குகள்

| | | | |
|---|---|---|---|
| அன்பாய் | உபயோகம் | வசிக்கின்றன | கடைந்து |
| நன்றி | உணவு | உருக்கு | பிரை |
| முதலியன | வெண்ணெய் | பிடரிமயிர் | |

1. நாம் சில விலங்குகளை வீடுகளில் வளர்க்கிறோம். அவை பசு, ஆடு, எருது, நாய், குதிரை முதலியன; அவை வீட்டு விலங்குகள் எனப்படும்.

2. சில விலங்குகள் காடுகளில் வசிக்கின்றன. அவை புலி, சிங்கம், கரடி முதலியன. அவை காட்டு விலங்குகள்.

3. வீட்டு விலங்குகளில் நமக்கு அதிக உபயோகமானது பசு. பசு பால் தரும். பால் நமக்கு

நல்ல உணவு. பாலைக் காய்ச்சிப் பிரை இட்டால் தயிராகும். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம். வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும்.

4. குதிரைக்குக் கொம்பு இல்லை. அதற்குப் பிடரி மயிர் உண்டு. குதிரை, சவாரி செய்ய உதவும். அதை வண்டியில் பூட்டி ஓட்டலாம். குதிரை மாட்டைவிட வேகமாகச் செல்லும்,

5. எருது ஏர் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் உதவும். உழவர்களுக்கு அது மிகவும் உதவியான மிருகம்.

6. நாய் மிகவும் நன்றி யுள்ளது. தன்னை வளர்ப்பவர்களிடம் அது மிகவும் அன்பாய் இருக்கும்; குழந்தைகளுடன் விளையாடும்; வீட்டைக் காக்கும்.

**பயிற்சி :**

(1) **விடை எழுது :**

1. சில வீட்டு விலங்குகளின் பெயர்களை எழுது.
2. காட்டு விலங்குகள் எவை ?
3. வீட்டு விலங்குகளில் நமக்கு அதிக பயன் உள்ளது எது ?
4. நமக்கு நெய் எவ்விதம் கிடைக்கிறது ?
5. கம்பளம் எதிலிருந்து நெய்கிறார்கள் ?

(2) **கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்துப் படி :**

1. பசு———மிருகம்.
2. வெண்ணெயை———நெய் ஆகும்.
3. நமக்கு———நல்ல உணவு.
4. குதிரைக்கு———இல்லை.
5. புலி———வசிக்கும்.

(3) **ஒன்று** **பல**

| ஒன்று | பல |
|---|---|
| ஆடு | ஆடுகள் |
| பழம் | பழங்கள் |

ஆடு மேய்கின்றது.——**ஒன்று**
ஆடுகள் மேய்கின்றன.——**பல**

(4) **இம்மாதிரியே கீழுள்ள வாக்கியங்களை மாற்று :**

1. குதிரை ஓடுகிறது.
2. மரம் வளர்கிறது.
3. நாய் குரைக்கிறது.
4. குரங்குகள் கிளைகளில் தொங்குகின்றன.
5. கிளிகள் பறக்கின்றன.

(5) **விலங்குகளின் ஒலிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைத் தெரிந்துகொள்.**

நாய் **குரைக்கிறது.** குதிரை **கனைக்கின்றது.**
கழுதை **கத்துகிறது.** சிங்கம் **கர்ச்சிக்கிறது.**
பசு **கதறுகிறது.** பூனை **சீறுகிறது.**

# 27. பசு

(பாட்டு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொழி | பொத்தான் | தவிடு | தந்திடல் | சீப்பு | எரு |
| புதிய | கொம்பு | தருதல் | சொகுசு | உலர்தல் | நிறம் |

**பையன் :**

என்றன் நல்ல பசு நீயே
என்சொல் கேட்டு மொழிவாயே ;
புல்லும் தவிடும் தின்றிடுவாய் ;
புதிதாய் என்ன தந்திடுவாய் ?


**பசு :**

இனிய பாலைத் தந்திடுவேன் ;
இன்னும் தருதல் சொல்லிடுவேன் :
பாலும் தயிரும் நெய்யதுவே
பதமாய் ஆகும் மெய்யதுவே ;
சாணி உலர்ந்தால் அடுப்புக்காம் ;
தணிந்தால் எருவும் நிலத்துக்காம் ;
தோலால் செருப்பும் செய்வார்கள் ;
சொகுசாய்ப் பையும் தைப்பார்கள் ;
கொம்பால் சீப்பும் செய்வார்கள் ;
குடைந்து பொத்தான் செய்வார்கள் ;
இன்னும் செய்யும் பொருள்களையே
என்னால் சொல்லத் திறமில்லையே !

பயிற்சி :

(1) விடை எழுது :

1. பசு என்ன தின்னும் ?
2. தோலினால் என்ன செய்வார்கள் ?
3. பொத்தானும் சீப்பும் எதனால் செய்கிறார்கள் ?



# 28. பறவைகள்


| | | | |
|---|---|---|---|
| கருமை | சேவல் | முட்கள் | கரையும் |
| பசுமை | நீந்தும் | உயரம் | பொரிக்கும் |
| பெட்டை | மெல்லிய | தானியம் | எழுப்பும் |

1. காகம், கிளி, பருந்து முதலியவற்றின் படங்களைப் பார். இவைகளுக்கு இறக்கைகள் உண்டு. இவை இறக்கைகளின் உதவியால் பறக்கின்றன. அதனால் இவைகளுக்குப் பறவைகள் என்பது பெயர்.

2. காகம் கருமை நிறம் உள்ளது. அது அதிகாலையில் 'கா, கா' என்று கரையும்; காலையும் மாலையும் குளிக்கும்; அசுத்தப் பொருள்களையும் தின்னும். அது மெல்லிய சுள்ளிகளால் கூடு கட்டும்; கூட்டில் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்.





3. ஆண் கோழிக்குச் சேவல் என்பது பெயர். பெண் கோழிக்குப் பெட்டை என்பது பெயர்.



சேவல் விடியற்காலையில் 'கொக்கர கோ' எனக் கூவி நம்மை எழுப்பும். பெட்டைக் கோழி முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். கோழியால் பறக்க இயலாது. அது தானியங்களைக் கொத்தித் தின்னும்.

4. வாத்து நீரிலும் நிலத்திலும் வசிக்கும். அதன் விரல்களின் நடுவே மெல்லிய தோல் இருக்கிறது. அதன் உதவியால் அது நீரில் நன்றாய் நீந்தும். அதன் உடம்பில் ஒரு விதப் பசை இருக்கிறது. அதனால், அதன் உடலில் நீர் ஒட்டுவதில்லை. வாத்து, முட்டை இடும். ஆனால், அதற்கு அடை காக்கத் தெரியாது. அதனால் அதன் முட்டைகளைக் கோழி முட்டைகளுடன் சேர்த்து வைப்பார்கள். பெட்டைக்கோழி அடைகாத்து அவற்றையும் பொரிக்கும்.





5. பச்சைக்கிளி அழகுள்ளது. அதன் மூக்குச் சிவப்பாகவும், உடல் பசுமையாகவும் இருக்கும். சிலர் அதைக் கூண்டில் வைத்து வளர்ப்பார்கள். அதைப் பேசவும் பழக்கலாம். கிளி பழங்களைப் பிரியமாய்த் தின்னும்.

## பயிற்சி :

**(1) விடை எழுது :**


1. சேவல் நமக்கு என்ன உதவி செய்கிறது?
2. வாத்தின் உடம்பில் ஏன் நீர் ஒட்டுவதில்லை?
3. கூண்டில் வைத்து வளர்க்கும் பறவைகள் எவை?
4. கூடு கட்டி வாழும் பறவைகள் எவை?
5. கிளி, பருந்து முதலியவைகளுக்கு ஏன் பறவைகள் என்னும் பெயர் வழங்குகிறது?

**(2) தகுந்த சொற்களைக் கோடிட்ட இடங்களில் எழுது:**

1. நீரில்———நீந்தும். (கோழி, வாத்து)
2. ———வீட்டைக் காக்கும். (பசு, நாய்)
3. ———புல் தின்னும். (நாய், பசு)
4. ———பேசப் பழக்கலாம். (குயிலை, கிளியை)

**(3) பறவைகளின் ஒலிகளைத் தெரிந்துகொள் :**

1. சேவல் **கொக்கரிக்கும்.**
2. மயில் **அகவும்.**
3. காக்கை **கரையும்.**
4. குயில் **கூவும்.**



# 29. கிளி


(பாட்டு)

| | | |
|---|---|---|
| சொல்லிடு | கோதிடு | பவளம் |
| பழகிடு | பாடிடு | குலவி |

சொன்னதைச் சொல்லிடுவாய்—கிளியே!
சுகமாய்ப் பாடிடுவாய்.
என்னுடன் பழகிடுவாய்—கிளியே!
இன்பமாய்ப் பேசிடுவாய்.

கூட்டில் இருந்திடுவாய்—கிளியே!
குலவி மகிழ்ந்திடுவாய்.
காட்டில் பறந்திடுவாய்—கிளியே!
கனிகளைக் கோதிடுவாய்.

பச்சை நிறமுடையாய்—கிளியே!
பவள மூக்குடையாய்.
இச்சையாய் இங்கிருப்பாய்—கிளியே!
இன்பமாய் நான் வளர்ப்பேன்.



## 30. பழங்கள்

| | | | |
|---|---|---|---|
| முக்கனி | கொட்டை | எளிதில் | கெட்டி |
| சுளைகள் | உருசி | ஏழைகள் | அடி மரம் |
| குலைகள் | மணம் | கற்கண்டு | தொங்கும் |

1. உலகில் எத்தனையோ வகையான பழங்கள் உண்டு. நமது நாட்டிலும் பல வகையான பழங்கள் உற்பத்தியாகின்றன. அவற்றுள் வாழை, மா, பலா, கொய்யா, மாதுளை, கிச்சிலி, திராட்சை முதலியவை முக்கியமானவை.


2. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் என்பன சிறந்தவை. ஆதலால், அம்மூன்று பழங்-

களுக்கும் **முக்கனி** என்னும் பெயர் வழங்கி வருகிறது.


3. வாழைப்பழம் குலை குலையாகக் காய்க்கும். குலையில் பழங்கள் சீப்புச் சீப்பாய் இருக்கும். வாழைப் பழங்கள் பெரும்பாலும் மஞ்சள் நிறமாகவே இருக்கின்றன. சில பழங்கள் பச்சை நிறமாயும், சில பழங்கள் சிவப்பு நிறமாயும் இருக்கின்றன. வாழைப்பழம் உருசியும் மணமும் உள்ளது. இதன் விலையும் குறைவு. ஆகையால், இதை ஏழைகளும் எளிதில் வாங்கிச் சாப்பிடலாம்.



4. மாமரத்தை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? மாம்பழங்களில் பல வகை உண்டு. சில பழங்கள் கற்கண்டைப் போல இனிக்கும். சில மாம்பழங்கள் புளிக்கும். புளிக்கும் பழங்களைத் தின்றால் பல் கூசும்.



5. பழங்களில் பெரியது பலாப்பழம். அது பலா மரத்தின் பருத்த கிளைகளிலும், அடி மரத்திலும் பழுத்துத் தொங்கும். பலாப்பழத்தின் மேல் தோல் உறுதியாயும் கெட்டியாயும் இருக்கும். அந்தத் தோலின் மேல் முட்கள் நெருக்கமாய் இருக்கும். பலாப் பழத்தை அறுத்தால், உள்ளே



இனிப்பான சுளைகள் இருக்கும். அவை மஞ்சள் நிறமானவை. சுளைக்குள் கொட்டை உண்டு. அதைச் சமையல் செய்து சாப்பிடலாம்.

6. பழங்களை உண்பது உடலுக்கு நல்லது. ஆனால், நன்றாய்ப் பழுக்காத பழங்களையும், அழுகிய பழங்களையும் புசிக்கலாகாது. அவற்றைப் புசித்தால் நோய் உண்டாகும்.

**பயிற்சி :**

(1) **விடை சொல் :**

1. 'முக்கனி' என்பவை எவை ?
2. பழங்களில் பெரியது எது ?
3. விலை குறைவான பழம் எது ?

(2) **இதைத் தெரிந்துகொள் :**

நிறங்களில் முக்கியமானவை ஐந்து. அவை சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், ஊதா. அவைகளுக்குப் **பஞ்ச வண்ணம்** என்பது பெயர்.


(3) **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை அமைத்துப் படி :**

1. இலையின் நிறம்———.
2. வானத்தின் நிறம்———.
3. எலுமிச்சம் பழத்தின் நிறம்———.


# 31. சுவைகள்

| | | |
|---|---|---|
| **கரும்பு** | **கசப்பு** | **கார்ப்பு** |
| **சர்க்கரை** | **புளிப்பு** | **சுவை** |
| **இனிப்பு** | **கைப்பு** | **கரிக்கும்** |
| **பண்டம்** | **உவர்ப்பு** | **துவர்ப்பு** |

1. இந்தப் படத்தைப் பார். ஒரு தட்டில் லட்டுக்கள் உள்ளன. லட்டில் சர்க்கரை கலந்திருக்கிறது. கரும்பில் இருந்து சர்க்கரை செய்கிறார்கள். சர்க்கரை **இனிப்பாய்** இருக்கும்.




2. மிளகாயும், மிளகும் காரமான பொருள்கள். அவற்றைத் தனியாகச் சாப்பிட முடியாது. அதனால், அவற்றைக் குழம்பு, இரசம், காய்கறிகளோடு சேர்த்துச் சாப்பிடுகிறோம். அவற்றின் உருசிக்குக் **கார்ப்பு** அல்லது **காரம்** என்பது பெயர். உருசி என்பது சுவை.






3. நாம் சாப்பிடும் உணவோடு சில காய்கறிகளையும் சமைத்துச் சாப்பிடுகிறோம். பாகற்காய் அவற்றில் ஒன்று. அதன் சுவைக்குக் **கைப்பு** அல்லது **கசப்பு** என்பது பெயர்.

4. புளியைக் கரைத்து அந்த நீரைக் குழம்பு, இரசம் முதலியவற்றில் சேர்க்கிறார்கள். அதனால், அவை **புளிப்பாய்** இருக்கின்றன. சிலர் புளிக்குப் பதிலாக எலுமிச்சம் பழத்தின் இரசத்தைச் சேர்க்கின்றனர்.





5. நெல்லிக்காய் **துவர்க்கும்.** அதை உப்பும் காரமும் சேர்த்து ஊறுகாய் போடுகிறார்கள். நெல்லிக்காய் ஊறுகாய் உடம்புக்கு மிகவும் நல்லது.

6. ஓர் உப்புக் கல்லை எடுத்து வாயில் போட்டுப் பார். அது **கரிக்கும்.** நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் அநேகமாய் உப்புச் சேர்க்கப்படுகிறது. உப்புச் சேராத தின்பண்டங்கள் சுவையாக இருப்பதில்லை. அதனாலேதான் 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே,' என்னும் பழமொழி வழங்குகிறது. உப்புச் சுவையை **உவர்ப்பு** என்றும் கூறலாம்.

7. இனிப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு ஆகிய ஆறு வகையான சுவைகளையும் **அறுசுவை** என்று சொல்லுவது வழக்கம்.

பயிற்சி:

**(1) விடை சொல் :**

1. 'அறுசுவை' என்பவை எவை ?
2. மிளகு என்ன சுவையுடையது ?

3. ஊறுகாய்க்கு உதவும் காய்கள் எவை ?

4. பண்டங்களுக்குச் சுவை கொடுப்பது எது ?

5. சர்க்கரையை எதிலிருந்து செய்கிறூர்கள் ?

(2) **கோடிட்ட இடங்களில் தக்க சுவையின் பெயர்களை அமைத்துப் படி :**

1. வேப்பங்காய்———இருக்கும்.
2. இஞ்சி———இருக்கும்.
3. கடுக்காய்———இருக்கும்.
4. மாங்காய்———இருக்கும்.
5. கரும்பு———இருக்கும்.

(3) **கோடிட்ட இடங்களில் தக்க நிறத்தின் பெயர்களை அமைத்துப் படி :**

1. பால்———நிறம் உடையது.
2. வெற்றிலை———நிறம் உடையது.
3. காகம்———நிறம் உடையது.
4. இரத்தம்———நிறம் உடையது.
5. ஆகாயம்———நிறம் உடையது.


(4) **கீழே குறிக்கப்பட்டுள்ள பொருள்களின் நிறமும் சுவையும் எழுது :**

வாழைப்பழம், முள்ளங்கி, வாழைப்பூ, மிளகாய், பலாச்சுளை, முந்திரிப்பழம்.

# 32. திருட்டு மாடு

| | | | |
|---|---|---|---|
| நொண்டி | துன்புறுத்த | தனித்தனி | வேலி |
| கழுத்து | மந்தை | பிரிந்து | நுழைந்து |
| கொடுமை | பிடிப்பான் | மேயும் | திருடு |
| பிராணிகள் | முக்கோணம் | கிட்டி | நேற்று |

**மணி**: முத்து, அதோ பார்! ஒரு மாடு நொண்டி நொண்டி வருகிறது. அதன் கழுத்துக்கும் காலுக்கும் யாரோ கயிறு கட்டி இருக்கிறார்களே! அது கொடுமை யல்லவா?




**முத்து**: ஆம், மணி. அது கொடுமைதான். பிராணிகளைத் துன்புறுத்தக் கூடாது. நேற்று நமது ஆசிரியரும் இதைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார். ஆனால், இது திருட்டு மாடு; மாடுகளோடு சேர்ந்து மந்தையில் இருப்பதில்லை; அடிக்கடி திருட்டுத்தனமாய் மந்தையிலிருந்து ஓடிவிடுகிறது; அப்படி ஓடாமல் இருப்பதற்கு மாட்டுக்காரன் இப்படிக் கட்டி யிருக்கிறான்.

**மணி**: அப்படி ஓடிவிடுவதற்காக இப்படியா கட்டுவது? ஐயோ பாவம்! அதற்கு நடக்கக்கூட முடியவில்லையே!

**முத்து**: இப்படிக் கட்டாவிட்டால், அவன் மாலையில் மந்தையை ஓட்டிக்கொண்டு வரும்பொழுது இதை எப்படித் தேடிப் பிடிப்பான்? இந்தத் திருட்டு மாடு எங்கேயாவது ஓடிவிடு மல்லவா? அதற்காகத்தான் கழுத்துக்கும் காலுக்கும் கயிறு

கட்டி யிருக்கிறுன். இப்போது அது எப்படி ஓட முடியும் ?

**மணி**: அப்படியா ! சரிதான். அதோ ! ஓர் ஆட்டின் கழுத்தில் கொம்பினுல் முக்கோணக் கிட்டி மாட்டி யிருக்கிறதே! அது மட்டும் ஓடிவிடாதோ ?



**முத்து**: நல்ல கேள்வி கேட்டாய். ஆடுகள், மாடுகளைப் போலத் தனித்தனியாய்ப் பிரிந்து மேயா. எப்போதும் ஆடுகள் மந்தை மந்தையாகவே மேயும். ஒன்று போன வழியே மற்ருென்றும் போகும். அப்படியே மந்தை முழுதும் சேர்ந்தே போகும்.

**மணி**: இதற்கு ஏன் கிட்டி போடுகிறுர்கள் ?

**முத்து**: ஆடு சில சமயங்களில் வேலிக்குள் நுழைந்து, செடிகளையும் பயிர்களையும் மேய்ந்துவிடும். கழுத்தில் கிட்டி யிருந்தால் ஆட்டை வேலிக்குள் நுழையாதபடி அந்தக் கிட்டி தடுக்கும். அதனுலேதான் ஆட்டின் கழுத்தில் கிட்டி போடுகிறுர்கள்.

**மணி**: நல்ல ஆடாய் இருந்தால், நல்ல மாடாய் இருந்தால் இப்படி நடவாதே! திருட்டுத்தனம் மிகவும் கெட்டது அல்லவா ?

**பயிற்சி :**

1. **விடை எழுது :**

   1. மாட்டின் கழுத்திற்கும் காலுக்கும் ஏன் கயிறு கட்டுகிறுர்கள் ?
   2. ஆட்டுக்கு ஏன் கிட்டி போடுகிறுர்கள் ?
   3. நாம் என்ன செய்யக்கூடாது ?

## 33. தம்பீ !


1. தம்பீ ! தம்பீ ! என் சொல்லைத்
தள்ளாமல் நீ கேளப்பா :
தும்பி தன்னைப் பிடியாதே ;
துட்ட ரோடு சேராதே.

2. கடினம் என்று நினையாமல்
கருத்தாய்ப் பாடம் படிப்பாயே ;
நல்லவ ரோடு அன்போடு
நாளும் பிரியா திருப்பாயே.

3. தாயார் சொல்லைத் தள்ளாதே ;
தந்தை சொல்லைத் தட்டாதே ;
ஓயா மல்நீ தின்னுதே ;
உண்மை பேச அஞ்சாதே.

4. பொய்யை நீயும் சொல்லாதே ;
பொறுமை தன்னை மறவாதே ;
மெய்யே என்றும் நீபேசி,
மேன்மை யாக வாழ்வாயே!

## 34. இது என்ன ?



1. ஆழக் குழி வெட்டி,
அதில் ஒரு முட்டை வைத்து,
அண்ணாந்து பார்த்தால்,
அநேகம் முட்டை. —இது என்ன ?


2. நான்கு காலிருக்கும், நடப்பதில்லை ;
இரண்டு கையிருக்கும், பிடிப்பதில்லை ;
கண்கள் உண்டு, பார்ப்பதில்லை;
முதுகுண்டு, தலையில்லை. —இது என்ன ?

3. நான்கு உலக்கை குற்றி வர,
இரண்டு முறம் புடைத்துவர,
ஒரு துடுப்புத் துழாவி வர,
துரை மக்கள் ஏறி வருவது எது ?

# 35. புத்தியுள்ள காக்கை

| | | | |
|---|---|---|---|
| எழுந்திரு | உறவினர் | வருந்தி | அலகு |
| முதுகு | உண்டு | அலேந்து | மெதுவாக |
| மகிழ்ச்சி | காரியம் | திறமை | அழுகின |
| உறங்கு | தாகம் | கொஞ்சம் | புசித்திடு |

1. முன் ஒரு காலத்தில் எங்கும் மழை பெய்யவில்லே. அதனுல் குடிப்பதற்கும் தண்ணீர் கிடைப்பது அருமையாய் இருந்தது. மனிதர்கள் துன்பப்பட்டார்கள். விலங்குகளும், பறவைகளும் அதிகமாய்த் துன்பம் அடைந்தன. தண்ணீர் இல்லா-விட்டால் என்ன செய்ய முடியும்?



2. அப்போது ஒரு நாள் ஒரு காக்கைக்குக் குடிப்-பதற்குத் தண்ணீர் வேண்டி இருந்தது. அது தாகத்தால் வருந்திற்று; இங்கும் அங்கும் அலேந்து பார்த்தது; எங்கும் தண்-ணீர் கிடைக்கவில்லே. அது என்ன செய்யும்?

3. கடைசியாய் அந்தக் காக்கை ஒரு வீட்டிற்-குப் பறந்து போயிற்று. அங்கே ஒரு தண்ணீர்ப் பானே இருந்தது; ஆசையோடு காக்கை அந்தப் பானேயில் தண்ணீர் இருக்கிறதா என்று பறந்து போய்ப் பார்த்தது. அந்தப் பானேயில் தண்ணீர் நிறைய இல்லே; பானேயின் அடியில் கொஞ்சம்



தண்ணீர்தான் இருந்தது. அதனால், அது காக்கைக்கு எட்டவில்லை. ஆகவே, அந்தப் புத்திசாலியான காக்கை என்ன செய்தது, தெரியுமா ?

4. அது அருகில் இருந்த சிறு சிறு கற்களைத் தன் அலகினால் எடுத்து அந்தப் பானைக்குள் மெது-வாகப் போட்டுக்கொண்டே இருந்தது. தண்ணீர் மேலே வந்தது. உடனே அந்தக் காக்கை மகிழ்ச்சி-யாய்த் தண்ணீரை வேண்டிய மட்டும் குடித்து-விட்டுப் பறந்து போயிற்று.

5. பார்த்தீர்களா காக்கையின் செய்கையை ! அந்தக் காக்கை புத்தி உள்ளது அல்லவா ?

பயிற்சி :

1. **விடை எழுது :**

1. பானையில் தண்ணீர் எங்கே இருந்தது ?
2. தண்ணீர் குடிக்கக் காகம் என்ன யுக்தி செய்தது ?
3. பானையில் தண்ணீர் எப்படி மேலே வந்தது ?



## 36. காக்கை

(பாட்டு)

காலையில் எழுந்திடுவாய்,—காக்காய் !
காகா எனக்கரைவாய்.
மாலையில் முழுகிடுவாய்,—காக்காய் !
மகிழ்வாய் உறங்கிடுவாய். (1)

உறவினர் தம்முடனே,—காக்காய் !
உண்டு மகிழ்ந்திடுவாய்.
திறமாய்ப் பொருள்களையும்,—காக்காய் !
திருடியே தின்றிடுவாய். (2)

அழுகின பொருள்களையும்,—காக்காய் !
ஆசையாய்ப் புசித்திடுவாய்.
பழகின இடந்தனிலே,—காக்காய் !
பறந்து திரிந்திடுவாய். (3)

## 37. 'பேராசை பெருநட்டம்'

| | | |
|---|---|---|
| வருத்தம் | கண்டெடு | உண்மை |
| வணிகர் | ஏமாற்றம் | நம்பு |
| அடுத்த | நீதிபதி | இழந்து |
| பணப்பை | நோட்டு | திருப்பிக்கொடு |
| பரிசு | பேராசை | |

**குடியானவர்** : ஐயா, செட்டியாரே, ஏன் வருத்தமாய் இருக்கின்றீர் ?

**செட்டியார்** : ஐயா, நான் நேற்று வாணிகத்திற்காக அடுத்த கிராமத்திற்குப் போயிருந்தேன். வரும் வழியில் என் பணப்பை எங்கேயோ விழுந்துவிட்டது. பல இடங்களில் தேடியும் அகப்படவில்லை.

**குடியா** : ஐயோ பாவம்! அதைக் கண்டெடுத்துக் கொடுத்தால் என்ன பரிசு கொடுப்பீர்கள் ?

**செட்டி** : நூறு ரூபாய் கொடுப்பேன்.

**குடியா** : இது உங்கள் பணப்பைதானா ? இதை நான் வழியில் கண்டெடுத்தேன்.

**செட்டி** : ஆமாம்! ஆமாம்! இது என் பணப்பைதான் !

(செட்டியார் பணப்பையைத் திறந்து பார்த்து மகிழ்கின்றார்.)

**குடியா** : இப்போது உங்களுக்கு மகிழ்ச்சிதானே ? நீங்கள் சொன்னபடி ரூபாய் நூறு பரிசு கொடுங்கள்.

(செட்டியார் பேராசையினுல் நூறு ரூபாய் கொடுக்க மனமில்லாமல் குடியானவரை ஏமாற்ற யோசிக்கிருர்.)

**செட்டி** : உங்களுக்கு இனும் கொடுக்க வேண்டுவது உண்மைதான். ஆனுல், என் பணப்பையில் பதினெரு நூறு ரூபாய் நோட்டுக்கள் அல்லவா வைத்திருந்தேன்? அதில் இப்பொழுது பத்து நோட்டுக்கள்தாமே இருக்கின்றன? ஒன்று குறைகிறதே! அதற்கு என்ன சொல்லுகிறீர்?

**குடியா** : இல்லே, இல்லே. அதில் பத்து நோட்டுக்களே இருந்தன. நான் நன்ருக எண்ணிப் பார்த்தேன்.

**செட்டி** : நீங்கள் சொல்வது பொய். என் உத்தரவில்லாமல், ஒரு நோட்டை எடுத்துக்கொண்டீர்கள். உடனே போய்விடுங்கள். இல்லாவிட்டால் உங்களேப் போலீசாரிடம் சேர்த்துவிடுவேன்!

**குடியா** : ஐயோ! தெய்வமே! உபகாரம் செய்தவனுக்கு அபகாரமா! ஐயா, செட்டியாரே, என்னே ஏமாற்றவா பார்க்கிறீர்? வாரும் நீதிபதியிடம் போவோம்.

(நீதிபதியிடம் போகிருர்கள்.)

**நீதிபதி** : ஐயா, செட்டியாரே, நீர் வாக்களித்தபடி நூறு ரூபாய் கொடுப்பதில் என்ன தடை?

**செட்டி** : ஐயாவே, என் பையில் பதினெரு நூறு ரூபாய் நோட்டுக்கள் வைத்திருந்தேன்.

இப்போது அதில் பத்து நோட்டுக்களே இருக்கின்றன. நான் பரிசு கொடுக்க வேண்டிய



நூறு ரூபாய் நோட்டை இவர் முன்னமே எடுத்துக்கொண்டிருக்கிறுர். எதற்காக இன்னும் ஒரு நூறு ரூபாய் கொடுக்க வேண்டும்?

**நீதிபதி**: அவர் எடுத்திருந்தால் எல்லா நோட்டுக்களையும் அல்லவா எடுத்திருக்க வேண்டும்? நீர் சொல்லுகிறபடி ஒரு நோட்டை மாத்திரம் எடுத்திருப்பாரென்பதை நான் நம்பவில்லை. அவர் உம் பணப்பையைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்ததனுலேயே அவர் நல்லவரென்பது தெரியவில்லையா?

**செட்டி** : ஆமாம்! அவர் மிகவும் நல்லவர். அவர் என் பணப்பையைக் கொடுத்துவிட்டார்.

**நீதிபதி** : நீர் உம் பணப்பையில் பதினெரு நோட்டுக்கள் வைத்திருந்ததாகச் சொல்லுகிறீர். அது உண்மை என்று நம்புகிறேன்.

**செட்டி** : ஆமாம், ஐயா. அது உண்மைதான்.

**நீதிபதி** : குடியானவர் பையில் பத்து நோட்டுக்கள் இருந்ததாகச் சொல்லுகிருர். அதையும் நான் நம்புகிறேன். ஆகையால் அவர் கண்டெடுத்த பணப்பை உம்முடையதாய் இருக்க முடியாது. அதனுல், அதைக் குடியானவருக்கே திருப்பிக் கொடுத்துவிடும். பதினெரு நோட்டுக்கள் உள்ள உம்முடைய பணப்பையைத் தேடிக் கண்டுபிடித்துக்கொள்ளும்.

(குடியானவர் பணப்பையை வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியாய் வீடு திரும்புகிருர். செட்டியார் பேராசையால் பொய் சொல்லி, சொந்தப் பணத்தை இழந்து, வருத்தத்துடன் திரும்புகிருர்.)

**பயிற்சி :**

(இந்த நாடகத்தை ஒரு சிறுவன் செட்டியாராகவும், மற்ரெருவன் குடியானவராகவும், இன்னெருவன் நீதிபதியாகவும் இருந்து நடிக்கலாம்.)

**(1) விடை எழுது :**

1. ஏன் செட்டியார் வருத்தமாய் இருந்தார்?
2. அவர் குடியானவருக்கு எத்தனை ரூபாய் பரிசு கொடுப்பதாகச் சொன்னுர்?
3. யார் பணத்தைத் தேடிக் கொடுத்தவர்?
4. செட்டியார் பரிசு கொடுத்தாரா?
5. நீதிபதி யாருக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டார்? ஏன்?

———

## உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டா.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டா.

3. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டா.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டா.

5. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டா.

6. நஞ்சுடனே ஒருநாளும்
பழக வேண்டா.

7. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டா.

8. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டா.

9. தனந்தேடி உண்ணுமல்
புதைக்க வேண்டா.

10. தருமத்தை ஒருநாளும்
மறக்க வேண்டா.

11. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டா.

12. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டா.

13. கொலைகளவு செய்வாரோடு
இணங்க வேண்டா.

14. கோயிலில்லா ஊரில்
குடியிருக்க வேண்டா.

15. மூத்தோர்சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டா.

16. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டா.

17. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டா.

18. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டா.

19. செய்தநன்றி ஒருநாளும்
மறக்க வேண்டா.

20. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டா.

சென்னை-600 008.

540

THIRU. VI. KA.

# TAMIL VACHAKAM

II STANDARD

By

P. VEERARAGHAVAN

(Editor : 'Arambakkalvi.')

ASSOCIATION PUBLISHING HOUSE.

MADRAS-1.

Price As. 6] 1957 [37 Naye Paise.

Venkatesan Press, Madras-1.